செ.வெ.எண்: 403 நாள்: 02.07.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கருவூலத்தின் வழியாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் நடைபெற்று வருகிறது -**

**மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.N.பார்வதி அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் கருவூலத்தின் வழியாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் நடைபெற்று வருகிறது. இது குறித்து, புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.N.பார்வதி அவர்கள் தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் கருவூலத்தின் வழியாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் தாங்கள் ஓய்வூதியம் பெறும் கருவூலத்தில் ஏப்ரல் 2019 முதல் நடைபெற்று வருகிறது. இதுநாள் வரை நேர்காணலில் கலந்து கொள்ளாத ஓய்வூதியர்கள் தங்களது ஓய்வூதிய புத்தகம், ஆதார் அட்டை நகல் மற்றும் குடும்ப அட்டை நகல் ஆகியவற்றை சமர்பிக்காதவர்கள் தற்போது அலுவலக வேலை நாட்களில் 15.07.2019 க்குள் மேற்கண்ட ஆவணங்களுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். மேலும் ID கார்டு விண்ணப்பங்கள் கருவூலத்தில் சமர்ப்பிக்காதவர்கள் உடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.N.பார்வதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**

---